[17th October 1964

துறைமுக அபிவிருத்தி (எண்ணூர்)

* 17 கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை அருகிலுள்ள எண்ணூரை சிறிய துறைமுகமாக்குவதற்கான திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா?

THE HON. SRI V. RAMAIAH: Yes. There is a proposal for the development of Ennore as a Minor Port during the IV Plan period.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எண்ணூரை டவுன்ஷிப்பாக ஆக்கவும், சிறிய துறைமுகமாகவும் உருவாக்க திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. அதற்கு ஆகும் செலவு எவ்வளவு, அந்த வேலைகள் எப்பொழுது ஆரம்பிக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: சிறிய துறைமுகமாக அமைக்க பூர்வாங்க வேலைகள் நடந்து வருகின்றன. இப்பொழுது எவ்வளவு செலவாகும் என்று திட்டவட்டமாகச் சொல்வதற்கு இல்லை; இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. ப்ரிலிமினரி இன்வெஸ்டிகேஷன் பிரகாரம் ரூ. 94 லட்சம் ஆகும் என்று தெரிகிறது, ஆனால் தொடர்ந்து பரிசீலனை நடந்துக்கொண்டு இருக்கிறது. இறுதியாக முடிவு எடுத்த பிறகுதான் மொத்த அளவு தெரியும்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: சார், இது போன்று மாநிலத்தில் எந்தெந்தப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன? எப்பொழுது வேலை துவங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: நம் மாநிலத்தில் கடற்கரை ஓரத்தில் உள்ள பிரதேசங்களில் எங்கு எங்கு வாய்ப்பு இருக்கிறதோ அதையெல்லாம் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். சிறிய துறைமுகங்களை நான்காவது திட்டத்தில் எடுக்க முடியும்; எவை எவைகளை நான்காவது திட்டத்தில் எடுக்கலாம் என்று இன்னும் திட்டவட்டமாக தீர்மானிக்கவில்லை; ஆகவே அதைப் பற்றி இப்பொழுது சொல்வதற்கில்லை.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, பல்லவர் காலத்தில் மகாபலிபுரமும், சோழர் காலத்தில் காவிரிப்பூம் பட்டணமும் கடற்கரைத் துறைமுகங்களாக இருந்தன. அவற்றை மறுபடியும் நல்ல துறைமுகங்களாகச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இரண்டும் பரிசீலனையில் இல்லை.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, இப்பொழுது மெரைன் ஒர்க்ஸ் சர்கிள் என்று புதிய துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே, அதன் வேலை எப்பொழுது துவங்கும்?

17th October 1964]

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது மெரைன் சர்க்கிள் ஏற்பட்ட பிறகுதான் இது போன்ற பரிசீலனைகள் செய்வதில் ஊக்கம் ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : எண்ணூருக்காக ஏற்படும் செலவு பூராவையும் மாநில சர்க்காரே ஏற்றுக் கொள்ளுகிறதா அல்லது மத்திய சர்க்காருக்கும் பங்கு இருக்கிறதா ? இருக்கிறது என்றால் எவ்வளவு சதவிகிதம் என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : சிறிய துறைமுகங்கள் அபிவிருத்திக்காக விசேஷ முறையில் நிதிகள் இருக்கின்றன. அவையெல்லாம் அந்த அடிப்படையில் நடக்கும். விதிமுறைகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்றால் அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், அமைச்சர் பதிலிலிருந்து சில சிறு துறைமுகங்கள் நான்காவது திட்டத்தில் சேர்க்கப்படும் என்று தெரிகிறது. கிழக்கு ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தொண்டியை நான்காவது திட்டத்தில் சேர்க்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : இன்னும் திட்டம் உருவாகவில்லை. அது உருவாகி ஒரு நிலைக்கு வந்த பிறகுதான் எதுவும் சொல்ல முடியும். இப்பொழுது இதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. ராமச்சந்திர ராயர் : சார், தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பரங்கிப்பேட்டை கடற்கரை துறைமுகத்தை நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : பரங்கிப்பேட்டை நான்காவது திட்டம் வரை காத்துக் கொண்டிருக்க வேண்டாம். இப்பொழுதே அங்கு நல்ல துறைமுகம் இருக்கிறது. அதை நல்ல முறையில் பயன்படுத்த மராமத்து இலாகாவினரும், மீன் துறையினரும் பரிசீலனை செய்து வருகிறார்கள். நல்ல முடிவுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

முதலியார் குழுவின் சிபாரிசுகள்

***18 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆரம்ப மருத்துவ மனைகளைப் பற்றி 1961-ல் திரு. ஏ. எல். முதலியார் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியின் சிபாரிசுகளின் நகல் ஒன்று சபை முன் வைக்கப்படுமா ?